செ.வெ.எண்: 16/2021 நாள்: 07.09.2021

# செய்தி வெளியீடு

## திருப்பூர் மாவட்டம் ,தாராபுரம் அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இஆப, அவர்கள் ஆய்வு செய்தார்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இஆப, அவர்கள் இன்று (07.09.2021) ஆய்வு மேற்கொண்டார்.

***இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தாவது,***

அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் அடிப்படை மருத்துவ சேவைகள், தாய்சேய் நல சேவைகள், கர்ப்பகால சிகிச்சை முறைகள், ஸ்கேன் பரிசோதனை, கர்பிணிதாய்மார்களுக்கு சர்க்கரை அளவு பரிசோதனை மற்றும் இரும்புசத்து குறைபாடு கண்டறிதல், தாய் சேய் இருவருக்குமான தடுப்பூசிகள், 24 மணி நேர பொது மற்றும் கர்ப்பகால சிகிச்சைகள், உயர் சிகிச்சைக்கான பரிந்துறைகள் போன்ற அடிப்படை மருத்துவ சிகிச்சைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அதே போல் வெளி நோயாளிகள் பரிவு மற்றும் உள் நோயாளிகள் பிரிவில் அதிக கவனம் தேவைப்படுபவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

டெங்கு, சிக்கன்குனியா போன்ற காய்ச்சல்களுக்கும், நாய் கடி, பாம்பு கடி உள்ளிட்ட விஷ கடிகளுக்கான சிகிச்சைகள் மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த வியதிகளுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டடு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

அதே போல், 30 வயதிற்கு மேற்பட்ட மகளிருக்கு கருப்பை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உயர் மருத்துவ சிகிச்கை தேவைப்படுபவர்களுக்கு மாவட்ட அரசு தலைமை மருத்துமனைக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. மேற்கண்ட பொது சுகதார துறையின் அனைத்து அடிப்படை மருத்துவ சேவைகளும் ஏழை, எளிய மக்களுக்கு அவர்களின் இருப்பிடங்களிலேயே வழங்கப்படுகிறதென மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் , இஆப அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக , அரசு மருத்துவமனையில் உள்ள பொது மருத்துவ பிரிவு, இயன்முறை மருத்துவம், தொற்றா நோய் பிரிவு, குழந்தைகள் பிரிவு, தாய் - சேய் நலப்பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, ஆய்வகம், தடுப்பூசி அறை, தோல் நோய் பிரிவு, சித்தா மருத்துவ பிரிவு,அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் மருந்துகள் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டு தொற்றா நோய் பிரிவில் தேவையான மருந்துக்கள் இருப்பு

குறித்தும் டாக்டர். முத்துலெட்சமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம், கர்ப்பிணி தாய்மார்கள் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசி குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

தேசிய குழந்தைகள் நலத்திட்ட மருத்துவக்குழு, நடமாடும் மருத்துவக்குழுவினர் தொடர்ந்து தங்கள் களப்பணியில் கூடுதல் கவனம் செலுத்தி கண்காணிக்க வேண்டுமெனவும் மற்றும் வரும் நோயாளிகளுக்கு நோயின் தன்மைக்கேற்ப கால தாமதமின்றி உடனடி சிகிச்சை அளிக்க வேண்டுமென மருத்துவருகளுக்கு அறிவுரைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் , இஆப அவர்கள் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.பாக்கியலட்சுமி, தாராபுரம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் மரு.சிவபாலன், மருத்துவர்கள், செவிளியர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**